**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திருமதி.R.சுஜாதா, B.Sc., L.L.M.,

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16 ஆம் நாள் வியாழக்கிழமை

**2057 திருவள்ளுவர் ஆண்டு பரபாவ வருடம் சித்திரை திங்கள் 03 ம் நாள்**

**அ.வ.எண்.27/2023**

**TNCB-13000031-2023**

1) ரங்கநாயகி

2) விஜயராகவன்

3) மணிராஜ் --- வாதிகள்

/ எதிர் /

1) திரு. வட்டாட்சியர் அவர்கள், பொள்ளாச்சி

2) தமிழ்நாடு அரசு அதற்காக அதன்
மாவட்ட ஆட்சியாளர் அவர்கள், கோயமுத்தூர் .... பிரதிவாதிகள்

இவ்வழக்கனாது, கடந்த 23.01.2023 ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு, 28.01.2023 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 10.04.2026 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி. S.முத்துக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளை கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

கடந்த 15.04.2022 தேதியில் இறந்து போன முருகானந்தம் என்பவருக்கு 1முதல் 3 வாதிகள் மட்டுமே சட்டப்பூர்வமான வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் வழங்கிட கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை VII, விதி 1-ன்படி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>வழக்குரையின் சுருக்கம்</u>**:

மேற்படி 1ம் வாதியும், 2, 3 வாதிகளும் இறந்துபோன லேட் முருகானந்தத்தின் வாரிசுகள் ஆவார்கள். 1ம் வாதியின் கணவரும். 2. 3 வாதிகளின் தகப்பனாருமான லேட் முருகானந்தம் கடந்த 15.04.2022-ம் தேதி கொண்டேகவுண்டன்பாளையம் கிராமம். அரண்மனை தெரு, கதவு இலக்கம்.1/115 என்ற முகவரியில் இறந்துவிட்டார். மேற்படி லேட்முருகானந்தம் 1ம் வாதியும், 2, 3 வாதிகளையும் மட்டுமே வாரிசாக விட்டு விட்டு இறந்துவிட்டார். லேட்,முருகானந்தத்தின் பெற்றோர்கள் ஏற்கனவே இறந்துவிட்டார்கள். ஆகையால் 1ம் வாதியும், 2,3 வாதிகளும் மட்டுமே லேட்,முருகானந்தத்தின் நேரடி வாரிசுகளாக இருக்கிறார்கள். லேட், முருகானந்தத்தின் முதல் மனைவி புஷ்பலதா மாண்புமிகு உடுமலை சப் ஜட்ஜ் கோர்ட்டில் H.M.O.P.103/1999 என்ற நெம்பரில் விவாகரத்து மனு தாக்கல் செய்து 14.7.1999 ம் தேதி ஒருதலைப்பட்சமாக உத்திரவு பெறப்பட்டுள்ளது.

(2.2) ஆகவே லேட், முருகானந்தத்தின் முதல் மனைவி புஷ்பலதா மேற்படி லேட்,முருகானந்தத்திடமிருந்து விவாகரத்து பெற்றுவிட்டதால் 1ம் வாதியும், 2.3 வாதிகள் மட்டுமே இறந்து போன லேட். முருகானந்தத்தின் வாரிசுகள் ஆவார்கள். மேற்படி லேட்,முருகானந்தத்தின் பெற்றோர்கள் ஏற்னவே இறந்துவிட்டார்கள். மேற்படி லேட்,

முருகானந்தத்தின் பெயரில் உள்ள சொத்தை பெயர் மாற்றம் செய்ய மேற்படி லேட் முருகானந்தத்தின் வாரிசு சான்றிதழ் தேவைப்பட்டதையடுத்து 1ம் வாதியும், 2,3 வாதிகளும் 1-ம் பிரதிவாதி அலுவலகத்தில் விண்ணப்பித்தார்கள். மேற்படி வாதிகளின் விண்ணப்பத்தை பரிசீலனை செய்த 1-ம் பிரதிவாதி லேட்.,முருகானந்தத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள் இருப்பதால் லேட்.,முருகானந்தத்தின் வாரிசுகளை கண்டறிய இயலாத நிலை உள்ளது என்றும் கூறி தகுந்த சிவில் நீதிமன்றத்தில் தகுந்த பரிகாரம் தேடிக் கொள்ள வாதிகளை அறிவுறுத்தி 14.10.2022 தேதியன்று உத்திரவு பிறப்பித்தார். மேற்படி 1ம் வாதியும், 2, 3 வாதிகளும் மட்டுமே இறந்து போன லேட்முருகானந்தத்திற்கு சட்டபூர்வமான வாரிசுகள் என்று விளம்புகை செய்யக்கேட்டு இந்த தாவாவை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறார்கள். 2-ம் பிரதிவாதியின் கீழ் 1-ம் பிரதிவாதி பணிபுரிவதால் 2-ம் பிரதிவாதி கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்.

(2.3) ஆகவே சமூகம் கோர்ட்டார் அவர்கள் கிருபை செய்து நானும். 2.3 வாதிகளும் மட்டுமே இறந்து போன லேட் முருகானந்தம் அவர்களுக்கு சட்டபூர்வமான வாரிசுகள் என்று விளம்புகை செய்தும், மற்றும் தாவாவின் தன்மை கருதி ஏதேனும் உத்திரவு பிறப்பிக்க வேண்டியிருப்பின் அதனை பிறப்பித்தும், தாவாவை தீர்ப்பு செய்ய வேண்டியது அவசியமும், நியாயமுமாய் உள்ளது

**3) <u>பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டு எதிர்வழக்குரையின் சுருக்கம்</u> :**

வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு பொய்யும் மோசடியுமானது. சட்டப்படியும், நியாயப்படியும் நிலைத்தக்கது அல்ல. வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கில் சொல்லியுள்ள சங்கதிகளில் இந்த பிரதிவாதி வெளிப்படையாக ஏற்றுக் கொண்டவைகளைத் தவிர

மற்றவற்றை இந்த பிரதிவாதி மறுக்கிறார். மறுக்கும் அந்த சங்கதிகளை வாதிகளே நிரூபிக்க வேண்டும்.

(3,2) தாவாவின் 3- வது பத்தியில் 1 முதல் 3 வாதிகள் இறந்து போன முருகானந்தத்தின் வாரிசுகள் என்றும், 1ம் வாதியின் கணவரும் 2, 3 வாதிகளின் தகப்பனாருமான முருகானந்தம் கடந்த 15.04.2022 -ல் இறந்து விட்டர் என்றும், மேற்படி முருகானந்தத்தின் பெற்றோர்கள் ஏற்கனவே இறந்து விட்டார்கள் என்றும், 1 முதல் 3 வாதிகள் மட்டுமே வாரிசுகள் என்று கூறியுள்ளதை வாதிகளே நிரூபிக்க வேண்டும். மேலும் மேற்படி முருகானந்தத்தின் முதல் மனைவி புஷ்பலதா உடுமலை சப்ஜட்ஜ் கோர்ட்டில் H.M.OP.103/1999 ல் விவகாரத்து மனு தாக்கல் செய்து 14.7.1999 -ல் ஒருதலைப்பட்சமாக உத்திரவு பெறப்பட்டுள்ளது என்பதையும். வாதிகளே நிரூபிக்கவேண்டும்.

(3.3) மேற்படி முருகானந்தத்தின் பெயரில் உள்ள சொத்தை பெயர் மாற்றம் செய்ய முருகானந்தத்தின் வாரிசு சான்றிதழ் தேவைப்படுவதாக கூறியுள்ளதை வாதிகளே நிரூபிக்க வேண்டும். மேற்படி முருகானந்தத்தின் வாரிசு சான்று கோரி 1ம் பிரதிவாதியிடம் மனுச் செய்ய, மேற்படி மனுவை பரிசீலனை செய்த 1 ம் பிரதிவாதி முருகானந்தத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள் இருப்பதாலும், மேற்படி முருகானந்தத்தின் வாரிசுகளை கண்டறிய இயலாத நிலை உள்ளது என்றும். விவகாரத்து வழக்கு பற்றிய தீர்ப்பு விபரம் பற்றி அறியப்பெறவில்லை என்பதாலும், நீதிமன்றம் மூலம் பரிகாரம் பெற்றுக்கொள்ளுமாறு கடந்த 14.10.2022 -ல் குறிப்பாணை கொடுத்துள்ளார். இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் தவறானது. இந்த பிரதிவாதி தேவைப்பட்டால் கூடுதல் பிரதிவாதம் தாக்கல் செய்யும் உரிமையை இதன் மூலம் ரிசர்வ் செய்து கொள்கின்றார். சமூகம் கோர்ட்டாரவர்கள்

வாதிகளின் வழக்கினை இந்த பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமாய் இந்த பிரதிவாதி பிரார்த்திக்கின்றார்.

**4) வழக்கெழுவினாக்கள் :**

வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை சங்கதிகளின் அடிப்படையில் இரு தரப்பும் கேட்கப்பட்டு, இவ்வழக்கின் தீர்விற்காக கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. | Whether the plaintiffs are the only legal heirs of the deceased Muruganantham ? |
| 2 | Whether the plaintiffs is entitled to the relief of declaration ? |
| 2. | To what other relief? |

**5) சாட்சிகள் :**

வாதி தரப்பில், வாதி ரங்கநாயகி தன்னை **வா.சா.1** ஆக விசாரித்துக்கொண்டு **வா.சா.ஆ.1** முதல் **வா.சா.ஆ.11** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 3 ம் நபர் பொன்ராஜ் வாதி தரப்பில் **வா.சா.2** ஆக விசாரித்துக்கொண்டு **வா.சா.ஆ.12** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 3 ம் நபர் நாகராஜ் வாதி தரப்பில் **வா.சா.3** ஆக விசாரித்துக்கொண்டு **வா.சா.ஆ.13** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் வாய்மொழி ஆவண சாட்சியங்கள் இல்லை.

**6) எழுவினா 1-2 ற்கான தீர்வு:**

1 ம் வாதியின் கணவர் 2, 3 மற்றும் 1 ம் பிரதிவாதியின் தகப்பனாரான முருகானந்தம் இறப்பிற்கு வாரிசு சான்றிதழ் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதை வாதிகள் நிரூபித்துள்ளார்களா என்று காண்கையில் மேற்படி முருகானந்தம் அவர்கள் கடந்த

16.06.2022 தேதியன்று காலமாகிவிட்டார் என்பது வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள **வா.சா.ஆ.1** பரிசீலிக்கையில் உண்மையென உறுதியாகிறது. மேற்படி இறந்துபோன முருகானந்தத்தின் பெற்றோர்கள் இறந்து விட்டார்கள் பாக்கியம் , பழனிச்சாமி ஆகியோர்கள் 16.06.2009, 02.09.2014 தேதிகளில் காலமாகிவிட்டார்கள் என்பது வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள **வா.சா.ஆ.10, 11** ஆவணங்களை பரிசீலிக்கையில் உண்மையென உறுதியாகிறது. ஆனால் வாதி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள சாட்சியின் படி இறந்துபோன முருகானந்தத்தின் தாயார் பெயர் பாக்கியம் என்றும் அவர் 11.06.2009 ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றும் அவரது தகப்பனார் பழனிச்சாமி 29.12.2014 ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றும் வாதி தரப்பில் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள சாட்சியத்தின் மூலமும் வா.சா.ஆ-10 மற்றும்11 சாட்சியத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

(6.2) மேலும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலிக்கையில் மேற்படி இறந்துபோன முருகானந்தத்தின் முதல் மனைவி உடுமலை பேட்டை சார்பு நீதிமன்றத்தில் HMOP 103/99 வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் ஒரு தலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில் இருந்து உறுதியாகிறது. எனவே முதல்மனைவியான புஷ்பா இறந்தபோன முருகானந்தத்திற்கு சட்டபடியான வாரிசு இல்லை என்பது உறுதியாகிறது.மேலும் இறந்துபோன முருகானந்தத்தின் பெயரில் உள்ள சொத்துக்களை பெயர் மாற்றம் செய்வதற்காக 1ம் பிரதிவாதியிடம் வாரிசு சான்று வேண்டி இந்த வாதிகள் மனு செய்த போது மேற்படி மனுவானது இறந்து போன முருகானந்தத்திற்கு ஒன்றுக்கு மேற்படி மனைவிகள்

இருப்பதாலும் மேற்படி முருகானந்தத்தின் வாரிசுகளை கண்டறிய இயலாத நிலை உள்ளது என்றும். விவகாரத்து வழக்கு பற்றிய தீர்ப்பு விபரம் பற்றி அறியப்பெறவில்லை என்பதாலும், நீதிமன்றம் மூலம் பரிகாரம் பெற்றுக்கொள்ளுமாறு கடந்த 14.10.2022 -ல் குறிப்பாணை கொடுத்துள்ளார். வாரிசுகளை இனம் காண முடியவில்லை என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது வா.சா-ஆ-3 ஆவணத்தில் இருந்து உறுதியாகிறது-

(6.3) மேற்படி பிரதிவாதிகள் இந்த வாதிகள் இறந்துபோன முருகானந்தத்திற்கு வாரிசுகள் இல்லை என்று உத்தரவு பிறப்பிக்காததில் இருந்தே இந்த வாதிகள் தான் இறந்துபோன முருகானந்தத்தின் சட்டபடியான வாரிசுகள் என்பது உறுதியாகிறது- மேலும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.8 மற்றும் 9 ஆவணத்தை பரிசீலிக்கையில் 2, 3 வாதிகள் இறந்துபோன முருகானந்தத்திற்கும் தாவா முதல் வாதிக்கும் பிறந்த குழந்தைகள் என்பது உறுதியாகிறது. வாதிகள் தரப்பை உறுதி செய்யும் விதமாக வா.சா 2 மற்றும் 3 சாட்சிகள் ஆக விசாரிக்கப்பட்டு அவர் மேற்படி சங்கதிகளை உறுதிபடுத்தி சாட்சியமளித்துள்ளார். மேற்படி வாதிகளை தவிர இறந்துபோன முருகானந்தத்திற்கு வேறு வாரிசுகள் இல்லை என்பது வாதிகள் தரப்பு வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களில் இருந்து உறுதியாகிறது.

(6.4) மேலும் இறந்துபோன முருகானந்தத்திற்கு சொத்துக்கள் உள்ளது என்பது வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.7 ஆவணத்தை பரிசீலிக்கையில் உண்மையென தெரியவருகிறது. மேலும் இந்த வாதிகள் இறந்துபோன முருகானந்தத்திற்கு வாரிசு இல்லை என்று இந்த பிரதிவாதிகள் எவ்வித ஆட்சேபணையும் செய்யாமல் வாரிசுகளை இனம் காண முடியவில்லை என்று கூறி குறிப்பாணை

வழங்கியதில் இருந்தே வாதிகள் தான் இறந்துபோன முருகானந்தத்தின் வாரிசுகள் என்பது உறுதியாகிறது என இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்கண்ட எழுவினாக்களுக்கு வாதிகளுக்கு ஆதரவாக தீர்வு காண்கிறது.

7) <u>எழுவினா 2 ற்கான தீர்வு</u>:

மேற்கண்ட எழுவினாவிற்கு வாதிகளுக்கு ஆதரவாக தீர்வு கண்டுள்ளதால் வேறெந்த பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது-

**<u>முடிவில்,</u> கடந்த 15.04.2022 தேதியில் இறந்து போன முருகானந்தம் என்பவருக்கு 1 முதல் 3 வாதிகள் மட்டுமே சட்டப்பூர்வமான வாரிசுகள் என்று விளம்புகை செய்து வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இத்தீர்ப்புரை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில், என்னால் அவையறிய பகரப்பட்டது.

RAMACHANDRAN SUJATHA

Digitally signed by RAMACHANDRAN SUJATHA
Date: 2026.04.18 01:15:00 +0930

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

<u>வாதிகள் தரப்பு சாட்சி</u> :

வா.சா.1. ரங்கராஜ் (வாதி)

வா.சா.2 பொன்ராஜ் (3 ம் நபர்)

வா.சா.3. நாகராஜ் (3 ம் நபர்)

**வாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் பட்டியல் :**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 16.06.2022 | முருகானந்தத்தின் இறப்பு சான்றிதழ் - சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 14.07.2022 | எச்.எம்.ஓ.பி. 103/1999 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு - சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 14.10.2022 | வட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவு - சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | | ரங்கநாயகி ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது - ஒளி நகல் |
| வா.சா.ஆ.5 | | 2 ம் வாதி ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது - ஒளி நகல் |
| வா.சா.ஆ.6 | | 3 ம் வாதி ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது - ஒளி நகல் |
| வா.சா.ஆ.7 | 01.10.2018 | பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் - அசல் |
| வா.சா.ஆ.8 | 14.02.2003 | 2 ம் வாதியின் பிறப்பு சான்றிதழ்- அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |
| வா.சா.ஆ.9 | 31.05.2004 | 3 ம் வாதியின் பிறப்பு சான்றிதழ்- அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |
| வா.சா.ஆ.10 | 16.06.2009 | 1 ம் வாதியின் மாமியாரும் 2,3 வாதிகளின் தகப்பனைப் பெற்ற வகையில் அவர்களின் இறப்பு சான்றிதழ் - அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. - |
| வா.சா.ஆ.11 | 02.01.2015 | 1 ம் வாதியின் மாமியாரும் 2,3 வாதிகளின் தகப்பனைப் பெற்ற வகையில் தாத்தாவுமான பழனிச்சாமி அவர்களின் இறப்பு சான்றிதழ் - அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. - |
| வா.சா.ஆ.12 | | பொன்ராஜ் ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.13 | | நாகராஜ் ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பட்டியல் :</u>**

– **இல்லை** -

RAMACHANDRAN SUJATHA

Digitally signed by RAMACHANDRAN SUJATHA
Date: 2026.04.18 01:15:05 +0930

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**பொள்ளாச்சி.**

-----------------------------------------------------

**<u>அசல் / வரைவு தீர்ப்புரை</u>**

அ.வ.எண்.27/2023

நாள் : 16.04.2026

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

-----------------------------------------------------